கோவிட்-19 தடுப்பூசி

# உண்மைகளைப் பெறுக.

## தடுப்பூசிகள் யாவருக்கும் இலவசம்.

- பணம் செலுத்த முடியாவிட்டாலும் கூட யாருக்கும் தடுப்பூசியை மறுக்க முடியாது.
- உங்களது குடிவரவு நிலை அல்லது உங்களிடம் ஒரு அடையாள அட்டை அல்லது மருத்துவக் காப்பீடு இருக்கிறதா அல்லது இல்லையா என்பதை கருத்தில் கொள்ளாமல் அனைவருக்கும் தடுப்பூசிகள் இலவசம்.

### தடுப்பூசி உங்களுக்குக் கோவிட்-19 ஏற்படாமற் பாதுகாக்கிறது.

- நீங்கள் தடுப்பூசி பெற்ற பின்னரும் உங்களுக்குக் கோவிட்-19 ஏற்பட்டால், தடுப்பூசிகள் நீங்கள் கடுமையாகச் சுகவீனமுறாமல் உங்களைப் பாதுகாக்கின்றன.
- உங்களுக்குக் கோவிட்-19 ஏற்பட்டிருந்தாலும், நீங்கள் அப்போதும் தடுப்பூசி பெற வேண்டும்.
- நீங்கள் தகுதிபெறும்போது பூஸ்டர் டோஸ்களைப் போட்டுக்கொள்வது உட்பட, உங்களின் கோவிட்-19 -இன் அனைத்து தடுப்பூசி டோஸ்களையும் போட்டுக்கொள்ளுங்கள்.



### கோவிட்-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவையும் பலனுள்ளவையும் ஆகும். தடுப்பூசி உங்களுக்கு கோவிட்-19 ஐ ஏற்படுத்த முடியாது.

- கோவிட்-19 ஏற்படுவதை விடத் தடுப்பூசியைப் பெறுவது பாதுகாப்பானது.
- மில்லியன் கணக்கானோருக்குப் பாதுகாப்பாகத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.
- ஐக்கிய அமெரிக்க வரலாற்றில் வேறு எத்தடுப்பூசியும் அதன் பாதுகாப்புத் தொடர்பில் இந்தளவு சோதிக்கப்பட்டதில்லை.
- தடுப்பூசி வெவ்வேறு வண்ணங்கள், இனங்கள், வயதுகள் என்பவற்றைச் சேர்ந்தோர் உட்பட ஆயிரக் கணக்கானோருக்குப் பாதுகாப்பானதென எண்பிக்கப்பட்டுள்ளது.
- கோவிட்-19 தடுப்பூசி உங்கள் DNA ஐ மாற்றுவதில்லை.

NRC-RIM
National Resource Center for Refugees, Immigrants, and Migrants



இன்னும் தகவல்களுக்கு: cdc.gov/coronavirus

# பக்க விளைவுகள் சாதாரணமானவை.

**பக்க விளைவுகள் என்றால் உங்களுக்குக் கோவிட்-19 உள்ளதென்று பொருளல்ல.**

- பக்க விளைவுகள் தடுப்பூசி உங்கள் உடலுக்கு கோவிட்-19 இற்கு எதிராக எப்படிப் போராடுவதென்று கற்பிக்கிறது.
- பக்க விளைவுகளில் உள்ளடங்கக் கூடியன:
  - நீங்கள் உங்கள் கையில் தடுப்பூசி பெற்ற இடத்தில் வலி அல்லது வீக்கம்.
  - தலைவலி, நடுக்கம், அல்லது காய்ச்சல்.
- நீங்கள் சுகவீனமாக உணர்ந்தால், நீங்கள் நன்றாக உணரும் வரை நீங்கள் சில நாட்களுக்கு வேலையிலிருந்து விடுமுறை பெற வேண்டியிருக்கலாம்.
- உங்களுக்கு ஒவ்வாமை இல்லை என்பதை உறுதி செய்ய, நீங்கள் தடுப்பூசி பெற்ற பிறகு 15–30 நிமிடங்கள் காத்திருக்க வேண்டியேற்படும்.



**கோவிட்-19 தடுப்பூசிகள் பருவமடைவதையோ அல்லது எதிர்காலத்தில் கருவுறுதலையோ பாதிக்காது.**

எதிர்காலத்தில் குழந்தை பெற விரும்புபவர்களுக்கும், கர்ப்பமாக இருப்பவர்கள் அல்லது தாய்ப்பால் கொடுப்பவர்களுக்கும் தடுப்பூசிகள் பாதுகாப்பானவை.

## உங்களின் அனைத்து தடுப்பூசி டோஸ்களையும் போட்டுக்கொள்ளுங்கள்.

- கோவிட்-19 தடுப்பூசிகள் கடுமையான நோய், மருத்துவமனையில் சேர்க்கப்படுதல் மற்றும் இறப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கின்றன.
- கோவிட்-19 -இன் அனைத்து தடுப்பூசி டோஸ்களையும் போட்டுக்கொள்ளுங்கள், அதனால் உங்களுக்கு அதிக பாதுகாப்பு கிடைக்கும்.
- நீங்கள் அனைத்து தடுப்பூசி டோஸ்களையும் போட்டுக்கொள்வது என்பது தடுப்பூசியின் இரண்டு டோஸ்களைப் பெறுவதும் மற்றும் தகுதி பெறும்போது பூஸ்டர் டோஸ்களைப் பெறுவதும் ஆகும்.
- நீங்கள் அனைத்து தடுப்பூசிகளையும் போட்டுக்கொள்ளாவிட்டால், நீங்கள் கோவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டு, ஆபத்தான முறையில் நோய்வாய்ப்படுவதற்கோ அல்லது இறந்துவிடுவதற்கோ மற்றும் அதை மற்றவர்களுக்குப் பரப்புவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

## தடுப்பூசிகளில் இவை இல்லை

- காப்புப் பொருட்கள்
- முட்டைகள்
- பன்றித் தயாரிப்புக்கள்
- ஜெலட்டின்
- மரப்பால்
- உயிருள்ள கோவிட்-19 வைரசு எதுவும்

## தடுப்பூசி பெற்ற பின்னர் பாதுகாப்பாக இருங்கள்.

தற்போது, நிபுணர்களுக்குத் தடுப்பூசி உங்களை எவ்வளவு காலம் பாதுகாக்கும் என்பது தெரியாது. தடுப்பூசி பெற்ற பின்னரும் இவற்றைத் தொடருங்கள்:



**ஒரு முகமூடியை அணியுங்கள்.**



**சமூக இடைவெளியைப் பழகுதல்.**



**உங்கள் கைகளை அடிக்கடி கழுவுதல்.**



**அதிகமாகத் தொடப்படும் பகுதிகளை அடிக்கடி தொற்று நீக்குதல்.**

**NRC-RIM**
National Resource Center for Refugees, Immigrants, and Migrants

**இன்னும் தகவல்களுக்கு: cdc.gov/coronavirus**